**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 190 of 2019

Depositions of PW -6 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு.தங்கராஜு

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது கரூர் மாவட்டம் வாங்கல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2019 ம் தேதி 08.00 மணிக்கு சூலூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது அங்கணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி சூலூர் காவல் நிலைய குற்ற எண்.519/2019 சட்டப்பிரிவு 392 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். புகார் **அ.சா.ஆ.**5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.**6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் அன்றைய தினமே காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரவிச்சந்திரன் மற்றும் வேல்முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மாதிரிவரைபடம் **அ.சா.ஆ.**7 ஆக

குறியீடு செய்யப்படுகிறது.

2. சாட்சிகள் அங்கணன், தெய்வானை, கமல், பரத்குமார், ரவிச்சந்திரன், வேல்முருகன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 23.06.2019 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணியளவில் போலீஸ் பார்ட்டியுடன் குற்றத்தடுப்பு நடவடிக்கையாக கோவை - திருச்சி மெயின் ரோட்டில் சூலூர் ஏர்போர்ஸ் DEFENCE COLONY அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது சுமார் 06.45 மணிக்கு கிழக்கிலிருந்து மேற்காக வேகமாக வந்த நம்பர் பிளேட் இல்லாத பல்சர் இருசக்கர வாகனத்தினை நிறுத்த அதை ஓட்டியவர் நிற்காமல் வேகமாக ஓட்டி தப்பிக்க முயன்றவரை போலீஸ் வாகனம் மூலம் துரத்திப் பிடித்து மேற்படியாரின் பெயர் விலாசங்களை கேட்க முன்னுக்கு பின் முரணாக மாற்றி மாற்றி இறுதியாக தனது பெயர் ரவி (எ) ரவிச்சந்திரன் என கூறியவரை விசாரிக்க கடந்த 22.06.2019 ம் தேதியன்று காலை 10.30 மணிக்கு சூலூர் சந்தைபேட்டை ரோட்டில் சர்ச் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி மேற்படி பல்சர் இருசக்கர வாகனத்தில் சென்றபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்த ஒருவரிடம் தான் கத்தியை காட்டி மிரட்டி பணம் மற்றும் செல்போன்களை பிடுங்கியதாகவும் குற்றத்தை ஒப்புக்கொண்டவரை மேலும் விசாரிக்க அவர் எவ்வித அச்சுறுத்தலோ துன்புறுத்தலோ ஆசை வார்த்தைகளோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆஜர் சாட்சிகள் கணேஷ்குமார் மற்றும் தங்கவேல் ஆகியோர்களின் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்தினை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. மேலும் வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 14.08.2019 ம் தேதி சட்டப்பிரிவு 392 இதசவின் படி குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. முதல் தகவல் அறிக்கையானது சம்பவ தேதியிலிருந்து காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் வாதியால் தாமதம். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திற்கும் சூலூர் காவல் நிலையத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் அரை கிலோ மீட்டர் இருக்கும். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரியை சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் சொன்ன சாட்சிகள் முன்னிலையில் கைது செய்து அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தால் அவர் பயன்படுத்திய

இருசக்கர வாகனத்தை இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு இருக்கும் என்றால் சரிதான். அவர் இருசக்கர வாகனத்தில் வரவில்லை. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்றது போல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

2. வழக்கு எதிரியை சம்பவ இடத்தில் கைது செய்ததற்கான பொது நாட்குறிப்பு பதிவுகள் எதுவும் வழக்கு ஆவணத்துடன் இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரில் நிலுவையில் இருந்த வழக்குகளை முடிப்பதற்காக எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்து சரிவரப்புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தவறுதலான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எதுவும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.25 18:13:17 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**